Registered as News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    ஐப்பசி 29    (15-11-1991)    வெள்ளிக்கிழமை    ஓசை: 270

## முகாமைத்துவசேவையாளருக்கு நிரந்தர நியமனமில்லை

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் பட்டதாரி முகாமைத்துவ பயிலுனர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட நூற்றுக்கணக்கான பட்டதாரிகளுக்கு ஒரு வருடத்திற்கு மேலாகியும் நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. முகாமைத்துவ பயிலுனர்களாக ஒருவருடம் பணியாற்றிய பின் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என ஆரம்பத்தில் உறுதியளிக்கப்பட்டது எனவே நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுங்கள். இவ்வாறு மட்டக்களப்பு 'பட்டதாரி முகாமைத்துவ பயிலுனர் ஒன்றியம்'' ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் கோரிக்கைவிடுத்துள்ளது. (4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாவில் உணவு நெருக்கடி:

# அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி

இலவசஇணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.

## அரசகரும மொழி கமிசன்; ஆறுபேர் நியமனம்

(கொழும்பு)

அரச கரும மொழி கமிசனுக்கு ஆறுபேர் நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் 1991 ஆம் ஆண்டின் பதினெட்டாம் இலக்க அரசகரும மொழியின் ஆணைக்குழு சட்டத்தின் ஐந்தாம் பிரிவின் பிரகாரம் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக பின்வருவோர் 1991 டிசம்பர் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.

எஸ். எம். பெர்னாண்டோ, ஜனாதிபதி சட்டத்தரணி தலைவர் கே. விக்னராஜா, டீல். குணசேகரா, பேராசிரியர் கே. என். ஓ. தர்மதாசா ஜனாப் எஸ் எம் ஜி ஜப்ரீத், பி. பி. மாணிக்கம் ஆகியோரே நியமனம் பெற்றவர்களாவர்.

## நிர்வாகச் சிக்கல்; அரச அதிபர் பேசுவார்

யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக மட்டுமல்ல நிர்வாகப்பிரச்சினைகள் தொடர்பாகவும் முக்கியமாக கொழும்பு உயர் அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடவிருக்கின்றார்.

மேற்படி தகவலை அரசாங்க அதிபர் கொழும்புக்கு புறப்படுவதற்கு சில நாட்கள் முன்னதாக தெரிவித்தார்.

## யாழ். செயலக அதிகாரிகளின் பொறுப்பை தட்டிக்கழிக்கும் போக்கு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி காரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவு நெருக்கடி நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்வதில் யாழ். செயலக அதிகாரிகள் அக்கறை காட்டாது அசமந்தப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

கடந்த இரு வாரங்களாக பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட உணவு விநியோகம் கையிருப்பு இன்மையால் இவ்வாரத்திலிருந்து பாதிப்படையலாமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கடந்த மாதம் இராணுவ நடவடிக்கை மூலம் சங்குப்பிட்டி கேரதீவு இறங்குதுறையை மூடி யாழ்ப்பாணத்திற்கான தரைவழி விநியோகத்தை அரசாங்கம் முற்றாக தடைசெய்தது. அத்துடன் கப்பல் மூலமான உணவு விநியோகத்தையும் திட்டமிட்டு தாமதித்து வருகிறது. இதே சமயம் விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தும் காங்கேசன்துறைமுகத்தை திறந்து விடுவதில் அரசாங்கம் காலதாமதம் செய்கிறது.

இது இவ்வாறிருக்க உணவுப் பொருட்கள் கொண்டுவருவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குதொடுவாயில் 'புலிவேட்டை' ஆரம்பம்

- கேணல் சரத்முனசிங்க

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் மோதல்கள் நடைபெற்றதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய இராணுவப் பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில் கொக்குத்தொடுவாய் பகுதி (4 ஆம் பக்கம் பார்க்க)

## கைதான இளைஞர்கள் கடற்பறவைகளாம்

இந்திய கடற்படை அணியும் கரையோர பாதுகாப்பு அணியும் ஒன்றிணைந்து காரைக்கால் கடலில் வைத்து கைது செய்யப்பட்ட பத்து இளைஞர்களும் புலிகளின் கடற்பறவைகளென 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக பொலிஸ் தரப்பிலிருந்து கிடைக்கும் தகவல்களிலிருந்து கடந்த பத்துமாதமாக இடைவிடாது கடற்பிர (4 ஆம் பக்கம் பார்க்க)

## நேரசூசிகை மாற்றம் பரீட்சையில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (சா. த) 1991 முன்னோடிப் பரீட்சை மருதனாமடம் கோட்டத்தில் பெரும்பாலான பாடசாலைகளிலும், பண்டத்தரிப்புக் ... களிலும் 03-11-91-இல் யாழ். கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட நேரசூசிகையின் படி நடந்தேறியது இதே வேளை ஏனைய பாடசாலைகளில் தொழில்நுட்ப பாடங்க...

## போதிய உணவில்லை; கடும் குளிர்

## நிர்வாகச் சிக்கல்; அரச அதிபர் பேசுவார்

யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக மட்டுமல்ல நிர்வாகப்பிரச்சினைகள் தொடர்பாகவும் முக்கியமாக கொழும்பு உயர்அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடவிருக்கின்றார்.

மேற்படி தகவலை அரசாங்க அதிபர் கொழும்புக்கு புறப்படுவதற்கு சில நாட்கள் முன்னதாக தெரிவித்தார்.

## அடுத்த சார்க்மாநாடு எங்கே? தீர்மானம் கயூமிடம்

**- ரணில் விக்கிரமசிங்கா**

சார்க் உச்சி மாநாட்டை மீண்டும் கொழும்பில் நடத்துவதா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு தற்போது அமைப்பின் தலைவராக இருக்கும்மாலைதீவு ஜனாதிபதி அப்துல் கயூமுடையதாகும் என்று நேற்றுக் கொழும்பில் நடைபெற்றவாராந்த செய்தியாளர் மாநாட்டில்பேசிய அமைச்சரவைப்பேச்சாளர் ரணில்விக்கிரமசிங்க குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், கொழும்பு சார்க் மாநாடு பிற்தள்ளி வைக்கப்பட்டமை சார்க் அமைப்புக்கு பின்னடைவை ஏற்படுத்தி

(4-ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு பட்டப்படிப்பு வசதி

அரசாங்க சேவையிலுள்ள ஊழியர்களுக்கு திறந்த பல்கலைக் கழகம் மூலம் பட்டப் படிப்பை வழங்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்ட பயிற்சி அடுத்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படும் என அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

...லிருந்து பாதிப்படையலாமென நம்பகமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

கடந்த மாதம் இராணுவ நடவடிக்கை மூலம் சங்குப்பிட்டி கேரதீவு இறங்கு துறையை மூடி யாழ்ப்பாணத்திற்கான தரைவழி வினியோகத்தை அரசாங்கம் முற்றாகத் தடைசெய்தது. அத்துடன் கப்பல் மூலமான உணவு விநியோகத்தையும் திட்டமிட்டு தாமதித்து வருகிறது. இதே சமயம் விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்தும் காங்கேசன்துறைமுகத்தை திறந்து விடுவதில் அரசாங்கம் காலதாமதம் செய்கிறது.

இது இவ்வாறிருக்க உணவுப் பொருட்கள் கொண்டு வருவ

(4 ஆம் பக்கம் பார்க்க)

# போதிய உணவில்லை; கடும் குளிர் அகதி முகாம்களில் மக்கள் அவலம்

கடந்த இரண்டு நாட்களாக பெய்த கடும் மழை காரணமாக அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் அல்லலுறுகின்றனர். மழை காரணமாக தரை ஈரமடைந்தமையினாலும், கடும்குளிரினாலும், போதிய உணவின்மையினாலும், ஏனைய வசதியின்மைகளினாலும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகி அல்லலுறுகின்றனர்.

தீவகப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து யாழ். நகரப்பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

# அடை மழை; பலத்த காற்று குடிசைகள் பல வீழ்ந்தன

யாழ். குடாநாட்டில் கடந்த நாற்பத்தியெட்டு மணிநேரத்தில் காற்றுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

அடைமழையாதலால் நேற்றுப் பகல் முதல் யாழ். பெரியகடைப் பகுதி சனநடமாட்டம் இன்றிக் காணப்பட்டது. பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

நகரில் தாழ் நிலங்களில் உள்ள மண்குடிசைகள் பலவற்றில் வெள்ளம் புகுந்தது

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிறார்கள், கர்ப்பிணிகள்; புதிய சத்துணவுத் திட்டம்?

யாழ் மாவட்டத்தில் உள்ள இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியிருக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும், சிறுவர்களுக்குமான புதிய சத்துணவுத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது.

திரிபோசா மாவுக்கு சிறிலங்கா கூட்டுப்படையின் தலைமை அலுவலகம் தடைவிதித்திருப்பதால் மேற்படி திட்டத்தைத் தயாரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று

(4ஆம் பக்கம் பார்க்க)

## நேரசூசிகை மாற்றம் பரீட்சையில் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (சா.த) 1991 முன்னோடிப் பரீட்சை மருதனார்மடம் கோட்டத்திலே பெரும்பாலான பாடசாலைகளிலும், பண்டத்தரிப்புக் கோட்டத்தில் சிலபாடசாலைகளிலும் 03-11-91-இல் யாழ். கல்விப் பணிப்பாளரினால் வெளியிடப்பட்ட நேர சூசிகையின்படி நடந்தேறியது. இதே வேளை ஏனையபாடசாலைகளில் தொழில்நுட்ப பாடங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வாரம் இன்று ஆரம்பம்

மாவீரர் எழுச்சி வாரம் இன்று முதல் கடைப்பிடிக்கப்படவுள்ளது. தமிழீழ மாவீரர் நாளை எப்படிக் கொண்டாடுவது என்பது பற்றியும், மாவீரர் வார வேலைகளை ஒழுங்கமைப்பது பற்றி மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தவுமாகவும் இந்த எழுச்சி வாரம் கொண்டாடப்படுகின்றது.

ஒவ்வொரு வட்டவை [illegible] பிராந்தியத்திலும் இரு கூட்டங்கள் நடாத்தப்படவிருப்பதுடன் [illegible] ஒரு வாரத்தினுள் நடாத்தப்படும். இக்கூட்டங்களில் அனைத்து மக்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு மக்களுறவுக் கொள்கை முன்னெடுப்பு [illegible]

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர்நாள் ஏற்பாடு வன்னியில் தீவிரம்

மாங்குளம் - கொக்காவில், மாங்குளம் - புளியங்குளம், மாங்குளம் - முல்லைத்தீவு பிரதான பாதைகளில்மாவீரர் நாள் அலங்காரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல இடங்களில் சிறிலங்கா இராணுவத் தாக்குதல்களினால் ஏற்பட்ட இழப்புகள் மத்தியிலும் 2 ஆவது மாவீரர் ஆண்டு தினக் கொண்டாட்டத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்ற ஆண்டு மாவீரர் வாரத்தில் மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் புலி

(4ஆம் பக்கம் பார்க்க)

வெகுசனத் தொடர்பு சாதனங்களில்

# அரச ஊழியர்கள் பணியாற்ற, கட்டுரை வரையத் தடை

அரசாங்க ஊழியர்கள் எவரும் பொதுசனத் தொடர்புச்சாதனங்களான பத்திரிகைகள் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் உள்நாட்டு வெளிநாட்டு நிருபர்களாகவோ முகவர்களாகவோ செயற்பட முடியாதென்றும் அரச ஊழியர்கள் யாராவது இதுவரை அவ்விதம்பதவிவகித்துவந்திருந்தால் அதிலிருந்து நீங்கிக் கொண்டகடிதத்தினை தாம் கடமையாற்றும் திணைக்களத் தலைவருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் செயலாளர் சகல திணைக்களத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலை வேள்விக்கு தம்மை அர்ப்பணித்தவர்கள் மாவீரர்

எமது தேசத்தின் விடுதலைக்காக தியாகியே நின்றவர்கள். எதிர்கால நாட்டின் உதயத்திற்காக தமது இளமை வாழ்வையே அர்ப்பணித்தனர். இவர்களில் பெரும் பாலானோர் மரத் அடிக்கின்ற அரும்புகள் [illegible]

**வாஞ்சிநாதன்**

வாழ்க்கை வானத்தில் சுதந்திரமாகச் சிறகடித்துக்கொண்டிருக்கின்ற இனிய சிட்டுக்கள். இவ்விதமான பச்சைத்தளிர்களினால் நடாத்தப்படுகின்ற ஆயுதப்போராட்டத்திலே விடுதலைவேள்வியிலே தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 15-11-91-27-11-91 வரை மாவீரர் கொடி வாரம்

## வரலாற்று நூல் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 9 இற்குரிய வரலாற்று நூல் எழுதுனர் பற்றிய கலந்துரையாடல் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கிற்கு சமூகக்கல்வி ஆலோசகர்களையும், வரலாற்றுத் துறையில் ஆர்வமுள்ளவர்களையும் கலந்து கொள்ளுமாறு இணைப்பாளர் சி. புலேந்திரன் கேட்டுக்கொள்கிறார்.

## பொலிசார் மீது தாக்குதல்; சீருடை கிழிப்பு

(காத்தநகர்)

இளைஞர் கும்பல் ஒன்று ஆத்திரங்கொண்டு பொலிசாரைத் தாக்கியதுடன் அவர்களைக் காயப்படுத்தி ஒருவரின் சீருடையைக் கிழித்து அவரின் தொப்பியையும் அபகரித்துள்ளது.

தெளிவுரைவிமது போதையில் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்த இளைஞர் கும்பலை பொலிசார் கண்டித்து இருவரில் ஒருவரைக் கைது செய்தபோதே மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

### தவறி விட்டது

13-11-91ம் திகதி இரவு 8 மணியளவில் கண்டி வீதியில் நாவற்குழிக்கும் நுணாவிலுக்குமிடையில். குட்டித் துணிப் பார்சலொன்றும் பாடசாலை லைசன்ஸ் அடங்கிய பார்சலொன்றும் தவறிப் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சாவகச்சேரியிலுள்ள "எழில்மாடம்" என்ற கடையில் அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள "ஸ்ரீ உமா பன்சிறைஸ்" (நவீனசந்தை) என்ற கடையில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1929)

புதிய உயர்கல்வி...

---

| இணைய சேவைகளுக்கு அங்கத்துவ நிறுவனங்களின் வாழ்த்துக்கள் ★ | யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் | இணையம் வளர அங்கத்துவ நிறுவனங்களின் வாழ்த்துக்கள் ★ |
|---|---|---|
| அகில உலக கெயர் CARE INTL. | | தென்னிந்திய திருச்சபை C. S. I. |
| போரூட் FORUT | | மனித முன்னேற்ற நடு நிலையம் HUDEC |
| மெதடிஸ்ற் திருச்சபை METHODIST MISSION | | அறவழிப் போராட்டக்குழு NVDAG |
| றெட்பானா REDD BARNA | | இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் RED CROSS |
| அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 88 RRF 83 | | சர்வோதயம் SARVODAYA |
| சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ. இ.) S. C. F. (UK) | | தமிழர் புனர்வாழ்வுக்கழகம் TRO |
| அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் TRRO | | வாலிபர் கிறிஸ்தவ சங்கம் YMCA |

# முதலாவது ஆண்டு நிறைவு நாள்

**15-11-1991**

### எமது இணைய செயற்திட்டங்கள்

- ★ அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு
- ★ இடம் பெயர்ந்தோருக்கான அவசர உதவிகள்
- ★ இடம் பெயர்ந்தோருக்கான தற்காலிக இருப்பிட வசதிகள்
- ★ தகவல் தரவுப் பிரிவு
- ★ ஆவணத் தொகுப்பு
- ★ அரச நிறுவனங்களுக்கிடையிலான தொடர்புகள் வலுப்படுத்தல்
- ★ மக்கள் தொடர்புகள் மேம்படுத்தல்
- ★ உணவுற்பத்தி ஊக்குவிப்பு
- ★ சுயசார்புத் தொழில் ஊக்குவிப்பு

யாழ். மாவட்ட புனர்வாழ்வுத் திட்டங்களை சிரமைக்க நாம்..........

ஒன்றிணைவோம்! சேவை செய்வோம்!

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.
இல. 100, சிலன் வீதி, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(B/3465)

---

இந். இடைத்தேர்தலில்

## பதினைந்தில் பன்னிரண்டை இந்திரா காங்கிரஸ் பெறும்

இடைத்தேர்தல் நடைபெறும் பதினைந்து நாடாளுமன்றத் தொகுதிகளில் பன்னிரண்டை ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சி கைப்பற்றும் என்று பிரதமர் பி.வி. நரசிம்மராவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார். ஆனால் இது இயலாத காரியம் என்று பாரதீய ஜனதா கட்சி சவால் விட்டுள்ளது. எனினும், பிரதமர் போட்டியிடும் நந்தியால் தொகுதியிலும் பாதுகாப்பு அமைச்சர் போட்டியிடும் தொகுதியிலும் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெறுவது பெரும்பாலும் சாத்தியம் என்று செய்திகள் கூறுகின்றன.

---

### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
### யாழ்ப்பாணக் கிளை

## நிறைவேற்றுத் திட்டமிடல் அதிகாரி

எமது பணிமனையின் திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, தகுதி, ஆற்றல், அனுபவம், திட்டங்களை நிறைவேற்றும் தன்மை, நிர்வாகத் திறமை, வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் தகைமை, சேவை செய்யும் ஆற்றல் உள்ளோர் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடைசித் திகதி 20. 11. 1991. நேர்முகப் பரீட்சை 21. 11. 1991 முற்பகல் 9.00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.
12. 11. 1991

க. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

(B/3477)

---

## நினைவு கூருகின்றோம்...

**1991 11 -15**

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பனையில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

லெப். கொலின்ஸ் (சின்னத்தோர் ஞானநாதன் - கன்னாட்டி, அடம்பன், மன்னார்)

1988 ஆம் ஆண்டு அக்கரைப்பற்று, கோளாவில்...

---

## வீட்டுச் சூழல் அபிவிருத்திப் போட்டி
### சிறுபோகம் — 1991

பிற பயனுள்ள மரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| எலுமிச்சை | - | குறைந்தது | 01 |
| முருங்கை | - | ,, | 01 |
| அகத்தி | - | ,, | 01 |
| இப்பில் இப்பில் | - | ,, | 03 |

தளபாடங்களுக்குரிய மரம்:

வேம்பு, தேக்கு வெளியோரமாக

இல. 100, சலன் வீதி, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

(B/3465)

தவர்கள் தயவுசெய்து சாவகச்சேரியிலுள்ள "எழில்மாடம்" என்ற கடையில் அல்லது யாழ்ப்பாணத்திலுள்ள "ஸ்ரீ உமா பன்சிபலஸ்" (நவீனசந்தை) என்ற கடையில் கொடுக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (R/1929)


புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

வெளிவாரிப்பட்டப் படிப்புக்கள்
1st in Com.
விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன

-நிர்வாகி

(B/3471)

புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

AL/91

❋ பொருளியல்
- குமாரவேல்
(சனி, ஞாயிறு)
கடந்த கால வினா --- விடைகள்
ஆரம்பம்: 16-11-91
(3 மணி)

❋ அரசியல்
(4 மணி)

(B/3472)


# வீட்டுச் சூழல் அபிவிருத்திப் போட்டி

## சிறுபோகம் — 1991

### யாழ்ப்பாண மாவட்டம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கமாகவும், எமது மாவட்டத்தில் வாழும் மக்களின் வீட்டுச்சூழலின் அபிவிருத்தியை, பராமரிப்பை, ஊக்குவிக்கவும் எம் மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதோடு போஷாக்கு உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மேற்படி போட்டியை எமது மாவட்டத்தில் நடத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் எவரும் பங்குபற்றலாம்.

**நிபந்தனைகள் வருமாறு:**

அ. விண்ணப்பம்

முடிவுத் திகதி: 30-11-91

அனுப்ப வேண்டிய முகவரி:

பிரிவு உதவி அரசாங்க அதிபருக்கு

குறிப்பு:

விண்ணப்பப்படிவம் எதுவுமில்லை. விண்ணப்பதாரிகள் சாதாரண தாளில் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கலாம்; போட்டி நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுவதாகவும், போட்டியை ஒழுங்கு செய்வோர் எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் விண்ணப்பத்தில் பிரகடனம் செய்ய வேண்டும். போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் பின்வரும் அம்சங்களை தனது வீட்டுச் சூழலில் ஏற்படுத்தி மதிப்பீட்டிற்கு இடம் கொடுக்க வேண்டும்.

1. பயிர்கள்

பருப்புவகை:
குறைந்தது 1/8 பரப்பில் பாசிப்பயறு செய்கை பண்ணுவது விரும்பத்தக்கது.

மரக்கறி வகை:
குறைந்ததொரு இலை மரக்கறி உட்பட ஏதேனும் நான்கு உள்ளூர் மரக்கறிப் பயிர்கள். ஒருபயிரின் குறைந்த பரப்பளவு 15'X10'.

கிழங்குவகை:
மரவள்ளி / வற்றாளை - குறைந்தது 30 சதுர அடி.

பழமரம்: பப்பாசி 03 - 05 மரங்கள்
வாழை 02 - 03 நிலையங்கள்

பிற பயனுள்ள மரங்கள்:

| | | | |
|---|---|---|---|
| எலுமிச்சை | - | குறைந்தது | 01 |
| முருங்கை | - | ,, | 01 |
| அகத்தி | - | ,, | 01 |
| இப்பில் இப்பில் | - | ,, | 03 |

தளபாடங்களுக்குரிய மரம்:
வேம்பு, தேக்கு வேலியோரமாக

வேறு பொருளாதார முக்கியத்துவமான மரங்கள்

| | | | |
|---|---|---|---|
| தென்னை | - | குறைந்தது | 03 |
| கமுகு | - | ,, | 03 |
| பனை (வேலியில்) | - | ,, | 05 |

2. கூட்டெரு தயாரிப்பு:
குவியல் / குழி - 15 X 8 (குறைந்தது ஒன்று)

3 மாடு / ஆடு / கோழி வளர்ப்பு
குடும்ப அங்கத்தவர்களுடைய தேவையையேனும் பூர்த்தி செய்யக் கூடிய முயற்சியாக இருக்க வேண்டும்.

குறிப்பு:
பொருத்தமான உறைவிடம் இருத்தல் அவசியம்.

ஆ. போட்டிகள் பின்வரும் மட்டங்களில் மதிப்பீடு செய்யப்படும்.

| மட்டம் | பார்வையிடும் திகதி |
|---|---|
| 01. உற்பத்திக்குழு மட்டம் ) | ஜனவரி 21ஆம் திகதி தொடக்கம் |
| 02. உதவி அரசாங்க அதிபர் மட்டம் ) | மாசி 15ஆம் திகதிவரை |
| 03. மாவட்டக் குழு மட்டம் ) | |

இ. பரிசில்கள்:

குறிப்பு:
01. பணமாக / பொருள்களாக வழங்கப்படும்.
02 பின்வரும் தொகைக்கு குறையாத பெறுமதியுள்ள பரிசில்கள் வழங்கப்படும்.

| மட்டம் | பெறுமதி | |
|---|---|---|
| 01. உற்பத்திக்குழு | 1-ம் இடம், ரூபா ) | மூன்று இடங் |
| | 2-ம் இடம், ரூபா ) | களுக்கு |
| | 3-ம் இடம், ரூபா ) | தகுந்த பரிசுகள் வழங்கப்படும். |

01. உற்பத்திக்குழு மட்டம்
02. உதவி அரசாங்க அதிபர் மட்டம்
03. மாவட்டக் குழு மட்டம்

எமது இம் முயற்சியில் பெருமளவில் பங்கு கொண்டு எமது மாவட்ட வளர்ச்சிக்கு உதவுமாறு எமது மாவட்ட மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுக் கொள்கிறோம்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்
யாழ். மாவட்டம்.

செயலகம்
யாழ்ப்பாணம்.

(B/3474)

**1991 11-15**

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் தம்பனையில் தேசவிரோதிகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

**லெப். கொலின்ஸ்** (சவேரிதோர் ஆசிநாதன் - கண்ணாட்டி, அடம்பன், மன்னார்)

1988 ஆம் ஆண்டு அக்கரைப்பற்று, கோரக்கல்லிமடுவில் இந்தியப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**றாஜா**

அம்பாறை, நிந்தவூரில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய

**கப்டன் தாசன்** (கணபதிப்பிள்ளை சண்முகம் பிள்ளை - காரைதீவு 03, அம்பாறை)

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**றஞ்சித்** (சந்தக்குட்டி இருதை - நிந்தவூர் 03, அம்பாறை)

அம்பாறை / விநாயகபுரம், திருக்கோயில் பகுதியில் எதிர்பாராத விதமாகக் கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த

**றொனி/ஐயர்** (வேலுப்பிள்ளை பூபாலபிள்ளை - விநாயகபுரம், அம்பாறை)

நுணாவில் கிழக்கில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

**டக்ளஸ்** (பாலசிங்கம் பரமேஸ்வரன் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி)

1990 ஆம் ஆண்டு காரைநகரில் முகாமை விட்டு வெளியேற முற்பட்ட சிறிலங்காக் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். சுபறாஜ்** (நடராஜலிங்கம் பரஞ்சோதி - களபூமி, காரைநகர்)

இதே சம்பவத்தின் போது சிறிலங்காக் கடற்படையினர் பொதுமக்களின் குடியிருப்புகளை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட குழந்தை, இளம்பெண் மற்றும் 3 தமிழ்ப் பெண்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/3478)

## சிந்தனைக்கு

ஒரு சமுதாயம் ஒவ்வொரு மனிதனையும் நடத்துகின்ற தன்மையைக் கொண்டுதான் அதன் பண்பாட்டின் சிறப்பை அளவிடலாம்.

— மகாத்மா காந்தி

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 15-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# ஈழநாதம்

## உலகெங்கும் அகதிகள் அவதி

ஹொங்கொங்கில் இருந்து வியட்னாம் அகதிகளை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அகதிகளுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றும் உள்ளன. இதில் சிலர் கொல்லப்பட்டும், சிலர் படுகாயம் அடைந்தும் உள்ளனர். அண்மையில் கிழக்கு ஜேர்மனியில் நாஜிகளின் தாக்குதலுக்கு உள்ளானதால் அகதி முகாம் ஒன்றில் இருந்து 67 வெளிநாட்டவர் மேற்கு ஜேர்மனிக்கு மாற்றப்பட்டனர். அங்கு லூதர் திருச்சபையில் அடைக்கலம் கோரியிருந்தனர் ஆனால் அவர்களை அவ்விடத்தை விட்டு வெளியேற வேண்டும் என அம்மாநிலத்து முதலமைச்சர் ஒருவாரம் காலக்கெடு விதித்துள்ளார்.

இதைவிட மோசமாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நடத்தப்படுகின்றார்கள். அகதிகள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் மீதான வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. பொலிஸாரும், அதிகாரிகளும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு வற்புறுத்தி வருகின்றனர்.

அதாவது ஐ. நா சாசனத்தில் அகதிகளுக்கு வழங்கப்பட்ட எந்தவித அந்தஸ்தையும் தற்பொழுது உலக நாடுகளில் எவையும் முழுமையாக, வழங்கத் தயாராக இல்லை என்றே சொல்லலாம். அதாவது ஜனநாயகத்திற்கு உதாரணங்களாகக் கூறப்படும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே இந்நிலை இல்லை என்று கூறலாம்.

மேற்குலகத்தில் அகதிகள் அனுமதிக்கப்படுவதற்கும், புறக்கணிக்கப்படுவதற்கும் தனியாக மேற்குலக அரசாங்கங்கள் மட்டும் காரணமல்ல. அந்நாடுகளுக்குச் சென்றடையும் வெளிநாட்டவர்களும் காரணமாகும் அவர்களில்

# விழுதுகள்

இலக்கில்லாமலும், கண்மூடித்தனமாகவும் ஷெல்களும், ஆட்லறிகளும் வீழ்ந்து வெடித்தன. எங்கு பார்த்தாலும் ஷெல் சத்தங்களும் மக்களது அவல ஓலங்களும் காதைப் பிளந்தன. கவசவாகனங்களும், டாங்கிகளும் தமது இஷ்டத்திற்கு இந்த மண்ணில் அலைக்கழித்தன. வயல்களென்றோ, வீடுகளென்றோ தோட்டங்களென்றோ பாராது (அவை சிறிப்பாய்ந்தன காக்கியுடுப்பில் வரண்ட முகங்களில் துப்பாக்கிச் சனியன்களை ஏந்திய வண்ணம் பல ஆயிரம் இந்திய இராணுவத்தினர் தமது காலடித்தடங்களை பதித்தனர் இது... இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் யாழ் நகரை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சித்த நேரம்.

கவசவாகனங்கள், டாங்கிகளின் வரிசை ஒன்று கோப்பாயூடாக கோண்டாவிலை நோக்கி தனது பாரிய சக்கரங்களை இந்த மண்ணில் பதித்த வண்ணம் விரைந்து வந்தன. பயங்கரமாக உறுமிய வண்ணம் வந்த டாங்கிகள் அங்கு நின்ற விடுதலைப் புலிகளுக்கு இராட்சதன் போன்ற தோற்றத்தினைக் கொடுத்ததில் ஆச்சரியமேதுமில்லை. இந்தியப் படைகளை எதிர்நோக்கி யாழ் நகரின் பல்வேறு இடங்களில் விடுதலைப் புலிகள் நிலைகொண்ட நேரம் அது. கோண்டாவில் சந்திக்கு அண்மையிலும் சில விடுதலைப் புலிகள் தாங்கள் முதன் முறையாக பார்க்கும் அந்த இராட்சதனை எதிர்கொள்ளத் தயாராகின்றனர்.

கோண்டாவில் சந்திக்கு அண்மையில் இருந்த ஒரு வீட்டிலிருந்து முன்னே விரைந்து வரும் டாங்கிகளை எதிர்கொள்ளத் தயாராகின்றான் விடுதலைப்புலிவீரனொருவன். அவன் தேவிலை குறியார்த்த வண்ணம் பசூக்காவை வைத்திருந்தான். அவன் பின்னால் எதற்கும் தயாராக பசூக்காவிற்குரிய லோடர், ''மச்சான் எங்கடை பக்கம் தான் வர்றாங்... அடிச்சுப்போட்டன்'' என்று சந்தோசத்துடன் கத்தினான் அந்த வீரன். பசூக்கா முழக்கத்துடன் அந்த டாங்கி ஒருமுறை தள்ளாடியது. பின்பு குபீரென அதன் பின்புறத்தில் நெருப்பு பற்றி எரிகின்றது. அடுத்ததாக வந்த டாங்கி இதனை முந்த முயற்சிக்கும் வேளையில் முதலாவது டாங்கி பயங்கரமாக வெடித்துச் சிதறியது இந்த வெடிப்பில் இரண்டாவது டாங்கியும் அதிர்ந்தது பின்பு அதுவும் வெடித்துச் சிதறியது.

ரஷ்யத் தயாரிப்பான இரண்டு T.72 டாங்கிகளே இவ்வாறு எமது மண்ணில் பரிதாபகரமாக அழிந்தன. ''பார் ஓடுறாங்கள்'' பசூக்காவுடன் எழுந்தவாறே அந்த வீரன் தனது நண்பனுக்கு கூறுகின்றான். டாங்கிகள் வெடித்ததைதொடர்ந்து இந்தியப்படையினர் பின்வாங்கினர். பசூக்கா வீரனது தலையில் காயம்பட்டு குருதி ஒழுகின்றது அந்த நிலையிலும் அவன் முகத்தில் ஒரு சிரிப்பு. தமிழீழ போராட்ட வரலாற்றில் இரண்டு டாங்கிகளை ஒரே தாக்குதலில் வீழ்த்திய அந்த வீரன் வேறு யாருமல்ல அவன் தான் மாவீரன் மேஜர் ஜேம்ஸ்

வீரம் விளைந்த வல்வை நகர் பெற்றெடுத்த அருந் தலைப்புதல்வன் ஜேம்ஸ் இவன் 06-09-1962 ம் ஆண்டு உருத்திராபதி தம்பதியினரின் ஐந்தாவது புதல்வனாக பிறந்தான். சிறுவயதிலேயே பொது வேலைகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் ஆர்வம் காட்டினான். ஹாட்லிக்கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தை முடித்த ஜேம்ஸ் 1983 ஆம் ஆண்டு இயக்கத்தின் பகுதி நேர உறுப்பினராகினான். அடிக்கடி சிங்களப்படைகளின் தாக்குதல்களிற்கு உள்ளாகும் வல்வை நகரில் பிறந்த ஜேம்ஸ்



## மேஜர் ஜேம்ஸ்

சிறிய பங்கே கிடைத்தது. ஜேம்ஸுக்கு இனிப்பு என்றால் உயிர் ஜேம்ஸின் முறை வந்தது தலைவர் கொடுத்த பலகாரத்தை வாயிக்குள் போட்டுக் கொண்டான் ''எப்படியிருக்கு?'' என தலைவர் கேட்டார். உதட்டின் மேல் விரலை வைத்து சற்று ஆழமாகச்சிந்தித்து விட்டு ''சரியாகத்தெரியேல்லை அண்ணை. இன்னுமொருதுண்டுதாங்கோ

காட்டிற்குள் இவன் வஞ்சியர்களுக்குப் பொறுப்பானவனாக நியமிக்கப்படுகின்றான். எந்த வேலையையும் நேர்த்தியாக செய்யும் பாங்கும்; அதே நேரத்தில் அவ்வேலையைக் குறும்புத்தனமாகச் செய்து பின்பு அதனைச் சமாளிக்கும் வண்ணமும் எல்லோரையும் கவர்ந்தது. இவனுடைய குறும்புத்தனத்திற்கு காட்டிற்குள் நடந்த சம்பவம் ஒன்று நல்ல எடுத்துக் காட்டாகும்.

காட்டினில் தலைவர் ஒரு முறை அருமையான இனிப்புப் பலகாரம் செய்திருந்தார். போராளிகள் எல்லோரையும் வரிசையாக வரச் சொல்லி விட்டு தலைவர் தனது கையால் எல்லோருக்கும் அதனை வழங்கினார். அத்துடன் அதன் சுவையையும் ஒவ்வொருத்தராய்க் கேட்டார். அது அளவாகச் செய்யப்பட்டதனால் ஒவ்வொருத்தருக்கும் ஒரு

குத் தேவையான பொருட்களை அனுப்புவதற்கும் வடமராட்சியை ஒரு தளமாக பயன்படுத்துகின்றான்.

இதே நேரத்தில் இந்திய இராணுவத்தின் மீது பல்வேறு இடங்களில் தாக்குதல்களை மேற்கொண்டு ஆயுதங்கள் பலவற்றைக் கைப்பற்றினான். எந்த தாக்குதலாயினும் R.P.G அடித்து தாக்குதலை ஆரம்பிப்பதுதான் இவன் வழக்கம். பருத்தித்துறை Vm றோட்டில் உள்ள காவலரண் மீதான தாக்குதலில் காயப்படுகின்றான் மேஜர் ஜேம்ஸ்.

1989 இல் வல்வை நகரின் மீது வெறியாட்டம் ஆடிய இந்தியப் படைமீது திட்டமிட்ட தாக்குதலை மேற்கொண்டு இராணுவத்தினர் பலரை வீழ்த்தி ஆயுதங்களை கைப்பற்றுகின்றான்.

இந்தியப்படை வெளியேறியதை தொடர்ந்து தீவகப் பகுதி பொறுப்பாளராகமேஜர் ஜேம்ஸ் நியமிக்கப்பட்டான். இச்சந்தர்ப்பத்தில் தான் இவனுடன் ஒன்றாகப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தீவகப் பகுதி மக்களின் சமூக, பொருளாதார பிரச்சினைகளை துல்லியமாக உணர்ந்தான். அதற்கேற்பவே அரசியல் வேலைத்திட்டங்களை வகுக்க வேண்டும் என வலியுறுத்தினான். இயக்க நடவடிக்கைகளில் தீவுப்பகுதியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினான் இவனது அணுகுமுறைகளாலும், நடவடிக்கைகளாலும் தீவகப் பகுதி மக்களின் பேரன்புக்கு பாத்திரமானான்.

இதன் பின்பு விடுதலைப்புலிகளின் இராணுவச் செயலகத்திற்கு பொறுப்பேற்கின்றான். மீண்டும் சிறிலங்கா இனவாத அரசுடனான மோதல் வெடித்த சிறிது காலத்தின் பின்பு வலிகாமம் பகுதி பொறுப்பாளராக நியமிக்கப்படுகின்றான். போர் உக்கிரமாக வெடித்தநேரம் இராணுவ முகாம் ஒன்றின் மீதான தாக்குதலிற்கு ஜேம்ஸ் திட்டமிடுகின்றான் இதற்கிடையில் 09-08-1990 அன்று பலாலி முகாம் காவலரணை பார்வையிட்டு அங்குள்ள போராளிகளுடன் உரையாடிவிட்டு திரும்புகின்றான். வரும்போது அச்சுவேலியில் குண்டுவீச்சு விமானமொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சா

அதாவது ஐ. நா சாசனத்தில் அகதிகளுக்கு வழங்கப்பட்ட எந்தவித அந்தஸ்தையும் தற்பொழுது உலக நாடுகளில் எவையும் முழுமையாக, வழங்கத் தயாராக இல்லை என்றே சொல்லலாம். அதாவது ஜனநாயகத்திற்கு உதாரணங்களாகக் கூறப்படும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலேயே இந்நிலை இல்லை என்று கூறலாம்.

மேற்குலகத்தில் அகதிகள் அனுமதிக்கப்படுவதற்கும், புறக்கணிக்கப்படுவதற்கும் தனியாக மேற்குலக அரசாங்கங்கள் மட்டும் காரணமல்ல. அந்நாடுகளுக்குச் சென்றடையும் வெளிநாட்டவர்களும் காரணமாகும். அவர்களில் பெரும்பாலானோர் அரசியல் அகதிகள் அல்லர். ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரி அல்லது புகலிடம் கோரி நுழையும் வெளிநாட்டவரில் எண்பது சதவீதமானவர்கள் போலிகள் என ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பிரபல அரசியல் விஞ்ஞானி பேராசிரியர் ஏர்ணல் போட்டேச தெரிவித்தார்.

பேராசிரியர் ஏர்ணல் போட்டேவின் கூற்றும் பெரும்பாலும் சரியானது. பொருளாதார சுபீட்சம் தேடியே பெரும்பாலான அகதிகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு நகர்ந்துள்ளார்கள். அங்கு செல்லும் இவர்கள் உள்ளூர் வாசிகளுக்கு தொழில் வாய்ப்பில் போட்டியாக அமைகின்றார்கள். இதனால் உள்ளூர் வாசிகளுக்கும் வெளியார்களுக்கும் முரண்பாடு வலுவடைந்து வன்முறை வளர்கிறது. வெளியார் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுகின்றன.

ஆனால் இந்தியாவைப் பொறுத்து இலங்கைத் தமிழ் அகதிகள் விரட்டப்படுவது இந்நிலையில் அடங்குவதில்லை. இலங்கைத் தமிழ் அகதிகள் உயிரைப் பாதுகாப்பதெற்கென உயிரைப் பணயம் வைத்து மேற்கொண்ட கடற்பயணங்கள் மூலம் இந்தியா சென்றவர்கள். அவர்கள் இந்தியவைச் சுரண்டவுமில்லை. அங்குள்ளவர்களுக்குப் போட்டியாக அமையவுமில்லை. ஆனால் அவர்கள் விரட்டப்படுவது ஆட்சியாளரின் வஞ்சம் தீர்க்கும் திட்டமிட்ட நடவடிக்கையாகும். அப்பாவி மக்களை தமது அரசியல் அபிலாஷைகளுக்காக வஞ்சம் தீர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதனால் பாதுகாப்பற்ற சூழ்நிலையிலும் அவர்களை திருப்பி அனுப்புவதில் அக்கறையாகவும், முனைப்பாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

அரசியல் பழிவாங்கலுக்காகவும், அதிகார ஆசையினாலும் அகதிகள் பகடைக் காய்கள் ஆவதோ அல்லது பலிக்கடாவாவதோ வரவேற்கப்படக் (அனுமதிக்கக்) கூடியதொன்றல்ல. இது ஒரு அநாகரிகச் செயலாகும்.

கொங்கொங்கில் இருந்து அகதிகள் விரட்டப்பட்டால் என்ன? ஜேர்மனியிலிருந்து விரட்டப்பட்டால் என்ன? இந்தியாவிலிருந்து விரட்டப்பட்டால் என்ன? இவையாவற்றிற்கும் என்ன காரணங்களுக்காக விரட்டப்பட்டனர் என்பதைவிட உலகில் அகதிகளாக பிறநாடுகளில் ஒருவரும் நிம்மதியாக வாழ முடியாது என்பதையே இது காட்டுகின்றது. அதாவது எப்பொழுதும் எவருக்கும் சொந்த மண்ணே நிரந்தர பாதுகாப்பைக் கொடுக்கும் என்பதே உண்மை.

---

அண்மையில் இருந்த ஒரு வீட்டிலிருந்து முன்னே விரைந்து வரும் டாங்கிகளை எதிர்கொள்ளத் தயாராகின்றான் விடுதலைப் புலிவீரனொருவன் - அவன் தேர்ந்த குறிபார்த்த வண்ணம் பசூக்காவை வைத்திருந்தான். அவன் பின்னால் எதற்கும் தயாராக பசூக்காவிற்குரிய லோடர், "மச்சான் எங்கடை பக்கம் தான் வர்றான்கள்" என்றபடியே பசூக்காவின் டிகரை தட்டினான். பசூக்கா முழங்குகின்றது. அதிலிருந்து புறப்பட்ட ஷெல் டாங்கியின் முன்புறம் பட்டு வெடிக்கின்றது. அந்தோ.... ஆனாலும் அந்த டாங்கி உறுமிய வண்ணம் இவர்கள் இருந்த வீட்டை நோக்கிப் பாய்ந்து வருகின்றது.

"பட்டு வெடித்தும் இப்படிச் சனியன் வருகுதே பக்கத்து வளவிற்குப் போவம்" என்று கூறிய பசூக்கா வீரன் தனது லோடரை அழைத்துக் கொண்டு ஓடினான். இவ்விரு விடுதலைப் புலிகளும் அருகிலுள்ள கமுகம் தோட்டத்திற் பாய்ந்து சென்று நிலையெடுக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் இருந்த வீட்டை இடித்து துவம்சம் செய்த வண்ணம் அந்த டாங்கி வெளிப்படுகின்றது. டாங்கியிலிருந்து ஷெல்களும், 50 கலிபர் ரவைகளையும் சரமாரியாக பொழிகின்றான். மீண்டும் பசூக்கா முழங்குகின்றது. இம்முறை முன்னாலிருந்த கமுகம் மரம் ஒன்று அதனை வாங்கி சரிகின்றது. வரிசை, வரிசையாய் கவசவாகனங்களும், டாங்கிகளும் வந்து கொண்டிருக்கின்றன. துப்பாக்கிச் சனியன்களுடன் இந்தியக் காலாட் படையினர் சுற்றிவளைக்கும் ஆபத்தான அந்த இக்கட்டான நேரம்....

விடுதலைப் புலிவீரர்கள் மனந் தளராமல் அடுத்த ஷெல்லை லோட் பண்ணுகின்றார்கள். முன்னால் வந்த டாங்கி இவர்களுக்கு முதுகைக்காட்டிய வண்ணம் றோட்டிற்கு ஏறுகின்றது. இந்த முறை அந்த வீரனது குறிதவறவில்லை. "மச்சான்

தான். சிறுவயதிலேயே பொது வேலைகளிலும் விளையாட்டுத்துறைகளிலும் ஆர்வம் காட்டினான். ஹாட்லிக்கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தை முடித்த ஜேம்ஸ் 1983 ஆம் ஆண்டு இயக்கத்தில் பகுதி நேர உறுப்பினராகினான். அடிக்கடி சிங்களப்படைகளின் தாக்குதல்களிற்கு உள்ளாகும் வல்வை நகரில் பிறந்த ஜேம்ஸ் மண்ணின் விடுதலையையும், மக்களின் விடுதலையையும் நன்குணர்ந்தான்.

1984ஆம் ஆண்டு முழுநேரப் போராளியாகின்றான். இக்காலத்தில் ஆரம்ப காலப் பணியாக அரசியல் வேலைத்திட்டத்தில் தீவிரமாகஈடுபட்டான். வல்வெட்டித்துறை தொண்டமனாறு, பொலிகண்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் இவனது அரசியல் வேலைத்திட்டங்கள் அமைந்தன. எங்கெங்கு சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களிருக்கின்றார்களோ அங்கு இவன் பிரசன்னமாய் அவர்களில் ஒருவனாய் இரண்டறக் கலந்துகொள்வான். இக்காலகட்டத்தில் விடுதலையில் ஆர்வமாகவிருந்த இளைஞர்கள் பலரை இயக்கத்தில் சேர்த்தான். தொண்டமனாறு முகாம் தொண்டமனாற்றை ஏனையபகுதிகளுடன்இணைக்கும் பாதைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்ததை அவதானித்த ஜேம்ஸ் தொண்டமனாறுசெல்வச்சந்நிதி ஆலயத்திற்கு பின்புறமாக இடைக்கட்டை இணைக்கும் பாதையொன்றை போடுவித்தான்.

10ஆம் முகாமில் இராணுவப் பயிற்சியை முடித்த ஜேம்ஸ் புலிகளின் இராணுவச் செயலகத்தில் கடமையாற்றினான். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் தமிழீழ மண்ணில் தனது இராட்சதக் கரங்களை அகலப் பரப்பியபடி வந்தபோது சந்தோசம் மாஸ்டர் தலைமையில் போரிடுகின்றான். கோண்டாவிலில் நடைபெற்ற இவ்வாறான ஒரு சண்டையின் போது தலையில் காயமுற்று சிகிச்சைக்காக காட்டிற்குப் போகின்றான்.

ஜேம்ஸுக்கு இனிப்பு என்றால் உயிர் ஜேம்ஸின் முறை வந்தது தலைவர் கொடுத்த பலகாரத்தை வாய்க்குள் போட்டுக் கொண்டான். "எப்படியிருக்கு?" என தலைவர் கேட்டார். உதட்டின் மேல் விரலை வைத்து சற்று ஆழமாகச்சிந்தித்து விட்டு "சரியாகத்தெரியேல்லை அண்ணா. இன்னுமொருதுண்டு தாங்கோ சொல்லுறேன்" என்றான். தலைவர் சிரித்தவாறே இன்னுமொரு துண்டைக் கொடுத்து விட்டு எப்படியிருக்கு? என்று கேட்டார். மீண்டும் உதட்டின் மேல் விரலை வைத்துச் சிந்தித்து விட்டு 'இன்னுமொரு துண்டு சாப்பிட்டால் தான் சரியாகச்சொல்லலாம்,' என்றான். எல்லோருக்கும் கொடுத்து மிச்சமிருந்தால் உனக்குத்தான்' என்று தலைவர் கூறுகின்றார். அதன்படியே மிகுதியாக இருந்தது ஜேம்ஸின் குறும்புத்தனத்திற்குக் கிடைத்தது.

காட்டிற்குள் இந்திய இராணுவத்துடன் நடைபெற்ற முதலாவது மோதல் உட்பட பல சண்டைகளில் கலந்து கொண்டு தனது வீரத்தை ஜேம்ஸ் வெளிப்படுத்தினான். காட்டினில் தலைவரது நேரடியான கவனிப்பில், வளர்ப்பில் ஜேம்ஸ் முழுமையான போராளியாகின்றான். தலைவரது பாசறையில் இவன் கற்றுக் கொண்டது ஏராளம். பின்னாளில் பொறுப்புவாய்ந்த தளபதியாக இருக்கும் போது அடிக்கடி காட்டில் நடந்தவற்றை நினைவுகூரத் தவறவில்லை.

1988ஆம் ஆண்டு தமிழீழத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வடமராட்சிப் பகுதியின் தளபதியாக நியமிக்கப்படுகின்றான். குறுகிய காலத்திற்குள் ஜேம்ஸ் தனது செயற்பாடுகளால் மக்களது அன்பையும், ஆதரவையும் பெற்றுவிடுகின்றான்.

இந்திய இராணுவத்தின் நெருக்கடியான நேரத்திலும்கூட காயப்பட்ட போராளிகளை பராமரிப்பதற்கும், காட்டிற்

னுவ முகாம் ஒன்றின் மீதான தாக்குதலிற்கு ஜேம்ஸ் திட்டமிடுகின்றான் இதற்கிடையில் 09-08-1990 அன்று பலாலி முகாம் காவலரணை பார்வையிட்டு அங்குள்ள போராளிகளுடன் உரையாடிவிட்டு திரும்புகின்றான். வரும்போது ஆகாயவெளியில் குண்டுவீச்சு விமானமொன்றின் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவடைகின்றான்.

மேஜர் ஜேம்ஸ் - இவனது குடும்பம் கூட விடுதலை வேட்கை கொண்ட குடும்பம் என்று தான் கூறவேண்டும். 1987 ஆம் ஆண்டு கைதடியில் எதிர்பாராத விதத்தில் வீரச்சாவடைந்த கப்டன் வாசு இவனது சகோதரனாவான். இவர் விடுதலைப்புலிகளின் இராணுவதொழில்நுட்பப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்தவர் 1990 நவம்பரில் கட்டுவனில் நடைபெற்ற மோதலில் வீரச்சாவடைந்த கப்டன் கத்தரிஜேம்ஸின் சகோதரியாவார். இவர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் உப செயலாளராக கடமையாற்றியவர்.

"டோன் வொறி" (Dont worry)-என்ன பிரச்சினை வந்தாலும் சற்று சிந்தித்துவிட்டு புன்சிரிப்புடன் ஜேம்ஸ் கூறும் வார்த்தை [illegible] என்ன வந்தாலும் அதனை துணிவுடன் எதிர்நோக்கும் தன்மை அவனுக்குரியது. இதுவே அவன் தனது நண்பர்களுக்கு விட்டுச்சென்றது.

\- கஸ்ரோ

## பாலர் கலைவிழா

தெல்லிப்பழை - உடுவில் அரசாங்க அதிபர் பிரிவுகளில் சர்வோதயத்தின் ஆதரவில் நடைபெறும் சிறுவர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் பாலர் கலைவிழா நாளை காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது இராமநாதன் கல்லூரி கலையரங்கில் நடைபெறவிருக்கும் இப்பாலர்கலை விழாவில் அனைவரும் கலந்து கொள்ளும்படி ஒழுங்கமைப்பாளர்கள் வேண்டியுள்ளனர்.

# பிரிட்டனுக்கு புகுவோரைதடுக்க புதிய சட்டம் நிறை வேற்றம்

(லண்டன்)

பிரித்தானியாவில் புகலிடம் கோருபவர்கள் மீது கட்டுப்பாடுகளை அதிகரிக்கும் சட்டமூலம் ஒன்றை பிரித்தானிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

பிரித்தானிய உள்துறை அமைச்சர் கெனத் பேகர் இச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். இதன் மூலம் போலியான விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு கடுமையான சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கெனத் பேகர் தெரிவித்தார்.

அரசியல், மத அல்லது இனப் பூசல்கள் காரணமாக புகலிடம் கோருவோரின் எண்ணிக்கை கடந்த நான்கு ஆண்டுகளில் 55,000 ஆக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"புகலிடம் மசோதா" எனப் பெயர் பெற்ற இச் சட்டம் பொது மக்கள் சபையில் நடைபெற்ற இரண்டாவது வாசிப்பின் போது 78 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இதே நேரம் பிரபுக்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள இந்த மசோதா திருத்தப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்த மசோதாவை பாராளுமன்றத்திற்கு கொண்டு வர வேண்டாம் என கிறிஸ்தவ தலைவர்கள் சட்டத்தரணிகள், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரித்தானிய அரசை கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் யோசனை; தீவிரமற்றது, வழமையானது

(டில்லி)

தென்னாசியாவை அணுவாயுதமற்ற பிராந்தியமாக ஆக்குவது பற்றிய பாகிஸ்தானின் யோசனையானது தீவிரமற்ற வழக்கமான ஒரு யோசனையாக இருக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பேரவையின் அரசியல் மற்றும் பாதுகாப்புக் கமிட்டியில் திங்கட்கிழமையன்று வாக்களிப்பிற்கு விடப்பட்ட இந்த யோசனையானது இந்தப் பிராந்திய நாடுகளிடையே முந்திய கலந்தாலோசனைக்கான அம்சம் எதனையும் குறிப்பிடவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் பாகிஸ்தானின் இந்த யோசனையை சோவியத் யூனியன் வரவேற்றுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்த அந்த அதிகாரி "பல்வேறு பிரச்சினைகளில் சோவியத் யூனியனின் கொள்கை சமீபத்திய காலத்தில் மாறுபட்டு இருப்பதாக", தெரிவித்தார்.

## மாவட்ட பிரதி ஆணையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மாவட்ட பிரதி ஆணையாளர் ஒருவர் யாழ். மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

புதிய நிர்வாகத் திட்டத்தின் கீழ் மேற்படி நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இப்பதவிக்கு திரு. அ. வைத்திலிங்கம் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

## அத்தியாவசியமற்ற பொருள்கள் கப்பலில் எடுத்துவருவது தடுக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு வரும் கப்பல்களில் அத்தியாவசியமற்ற பொருட்களை எடுத்து வருவதைநிறுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுக்க இருப்பதாக வடகிழக்குப் பகுதிக்கான அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு தேவநேசன் நேசையா தெரிவித்துள்ளார். வடபகுதிக்கு என அத்தியாவசிய சேவைகள் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்படும் கப்பல்களில் தனியார் நிறுவனங்கள் சிலவும் சில அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்களும் தமக்கு வேண்டிய பொருட்களை அனுப்பி வைப்பதால் இட நெருக்கடி காரணமாக செயலக அத்தியாவசிய சேவைகள் பகுதியினருக்கு வந்து சேரும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் கொள்ளளவில் கணிசமான பாதிப்பு ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி நடவடிக்கையை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார். இவ்விடயம்தொடர்பாக தான் பல அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் ஏற்கனவே கலந்துரையாடியதாகவும் அவர் தெரிவித்தார். (ச)

## மாவீரர் எழுச்சி வாரத்தில் துப்புரவு வேலைகள்

மாவீரர் வாரத்தின் எழுச்சி வாரத்தில் தமிழீழமெங்கும் துப்புரவு வேலைகளில் ஈடுபடுமாறு மாவீரர் நாள் 1991குழு தமிழீழ மக்களைக் கேட்டுள்ளது.

எழுச்சி வாரமான பதினைந்தாம் திகதி முதல் இருபத்தோராம் திகதிவரையான காலப்பகுதியில் வீடுகள், ஒழுங்கைகள், வீதிகள், பள்ளிக்கூடங்கள் காரியாலயங்கள் பொது இடங்கள் ஆகியவற்றை தமிழீழ மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து துப்புரவு செய்யுமாறு இக்குழு வேண்டுகிறது.

# அகதிகளைப் பொறுப் பேற்க சிறிலங்கா நிபந்தனை

(சென்னை)

எத்தகையதுமான வற்புறுத்தலுமின்றித் தாமாகவே நாடு திரும்ப முன்வந்துள்ளதாக கையெழுத்திட்டு இலங்கையிடம் கொடுத்தால் மாத்திரமே இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வரவேற்கப்படுவார்கள் என்று இலங்கையின் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் டீ சில்வா வாராந்த செய்தியாளர் மாநாட்டில்கலந்துகொண்டு கூறியுள்ளார்.

இவ்வாறு செய்தால் மாத்திரமே ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் அகதிகள் புனர்வாழ்வுக்கான பணத்தை இலங்கைக்கு ஒதுக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை திரும்பும் அகதிகள் திருக்கோணமலையில் அல்லது தலை மன்னாரில் வைத்துப் பொறுப்பேற்கப்படுவார்கள் என்றும், அவர்கள் நாடு திரும்பும் திகதியை ஒரு மாதத்திற்கு முன்பாகவே இந்தியா இலங்கைக்கு தெரியப்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனினும் தற்போது தமிழகத்தில் தங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கும் சுமார் இரண்டரை லட்சம் இலங்கைத் தமிழர்களில் மூவாயிரம் பேர் மாத்திரமே தாயகம் திரும்ப விரும்புவதாகக் கூறும் உறுதிப் பத்திரங்களில் கையொப்பமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் விவகாரம் சம்பந்தமாக இலங்கை இந்திய அரசுகளுக்கு இடையிலே அதிகாரிகள் மட்டத்தில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகவும். விரைவில் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் நேற்றிரவு பி. பி. ஸி தெரிவித்தது.

அடுத்த

ப்பதாகக் குறிப்பிட்டார் மேலும் இலங்கையைப் பொறுத்த மட்டில் அதிகாரிகள் மட்ட மாநாடு, வெளியுறவுச் செயலாளர்கள் மாநாடு, அமைச்சரவை மட்ட மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

மாவீரர் நாள்

கவிடம் வீழ்ந்ததையும் ஞாபகப்படுத்தும் வகையில் மாவீரர் தின ஏற்பாடுகள் அங்கு பெரிய

அடை மழை

வாய்க்கால்களில் வெள்ளம் வழிந்தோடியது. குளம் குட்

சிறார்கள்

விடுதலை

களைத்தான் நாம் மாவீரர்கள் என அழைக்கின்றோம். நமது மண் இயல்பாகவே சிவப்பு மண்ணாக இருந்தாலுங்கூட இந்தச் செம்மை மாவீரர்களின் இரத்தத்தினால் மேலும் மேலும் கரும் செம்மையாக்கிக் கொண்டிருக்கிறது என மாவீரர் நாளை முன்னிட்டு புலிகளின் குரல் வானொலிமூலம் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய உரையில் தமிழீழ மக்களுறவுக்கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பிரதிப்பொறுப்பாளர் கவிஞர் வாஞ்சிநாதன் தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்

இது சரித்திரம் படைக்கும் மண் மாத்திரம் அல்ல. இது தியாகம் படைக்கின்ற நாடு மாத்திரமல்ல; தியாகச்சரித்திரத்துக்கே இலக்கணமாகி விட்ட மண். இந்த மண்ணில் பிறந்த கொடிகள் என்றாலும் சரி, தளிர்கள் என்றாலுஞ்சரி உறுதியின் வித்துக்களாகத் தான் வளர்ந்து கொண்டிருக்

## உலகில் மிகப் பெரும் போதைப் பொருள் கடத்தல் முறியடிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பொலிசார் மூன்னூறு கிலோகிராம் ஹெரோயின் மற்றும் முப்பதாயிரம் கிலோகிராம் ஹசீஸ் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர். ஒரே தடவையில் இவ்வளவு பெருந்தொகையான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டது இதுவே உலகில் முதல் முறையாகும். கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் மொத்தப் பெறுமதிபதினான்கு கோடியே நாற்பது லட்சம் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. பலத்த துப்பாக்கிச் சண்டையின் பின்னர் போதைவஸ்துக் கடத்தல்காரர் இருவர் கைது செய்யப்பட்டதாக பாகிஸ்தான் பொலிசார் கூறியுள்ளனர்.

## ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு அந்தந்த மாவட்டத்திலேயே நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

செய்யப்பட்டதாகவும்,

...வனர்: ஒரே தடவையில் இவ்வளவு பெருந்தொகையான போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டது இதுவே உலகில் முதல் முறையாகும்.

...வினுக் கடத்தல்காரர் இருவர் கைது செய்யப்பட்டதாக மாஸ்கோவில் பொலிசார் கூறியுள்ளனர்.

### ஆசிரியர் பயிற்சிக்குத் தெரிவு

## அந்தந்த மாவட்டத்திலேயே நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

அடுத்த வருடம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அனுமதிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களிலே நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தூர இடங்களில் இருந்து நேர்முகப் பரீட்சைக்காக ஆசிரியர்கள் கொழும்புக்கு வருவதில் அநேக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்பதாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாகவும்,

நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் இடங்கள் பற்றி பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அறிவிக்கப்படும் என்றும்,

வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களிலும், ஆசிரிய கலாசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை நடத்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தையல் ஆசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்: மாவட்ட கிராமிய அபிவிருத்தி இலாகாவிற்கு நான்கு தையல் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான பெண்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் கணிதம் தமிழ் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்: இதில் சுகாதாரம், மனையியல், தையல் ஆகிய மூன்று பாடங்களில் ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனத்தில் தையல், மனையியல் பாடங்களுக்குரிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும். வேலணை, தெல்லிப்பளை, பருத்தித்துறை, சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் வெற்றிடங்கள் உள்ளன. (ச)

**அரச**

தலைவர்களுக்கும்சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளார்.

மேலும் அச்சுற்றறிக்கையில் அரச சேவையிலுள்ள ஒருவர் அரசியல் கட்டுரைகளோ அறிக்கைகளோஎழுதுவதென்றால் கூட திணைக்களத்தலைவரின் அனுமதி பெற்றே பத்திரிகைக்கு அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**கொக்குத் தொடுவாய்**

யில் 'புலிவேட்டை' என்னும் பெயருடன் புதிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடத்தியதாகவும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...ளர் மாநாட்டிலும் கலந்துகொண்டு கூறியுள்ளார்.

இவ்வாறு செய்தால் மாத்திரமே ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் அகதிகள் புனர்வாழ்வுக்கான பணத்தை இலங்கைக்கு ஒதுக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை திரும்பும் அகதிகள் திருக்கோணமலையில் அல்லது தலைமன்...

**சிறார்கள்**

யாழ். செயலகத்தில் அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் திரு. தேவநேசன் நேசையா, தலைமையில் நடைபெற்றது. பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரிகளும், பல அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளும் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் மேற்படி திட்டம் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

இத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (க)

**யாழ்.**

தத்குப்பதிலாக உரவகைகளை கப்பல்களில் அனுப்பி உணவுப் பொருள்வருவதைக் காலதாமதமாக்கியும் வருகிறது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு அனுப்பப்பட வேண்டிய உரவகைகள் யாழ். மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையால் நற்கொழுதன்ன சிறிய களஞ்சியங்களிலும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த இருவாரமாகவிநியோகிக்கப்பட்டு வந்த வாராந்த உணவுப் பங்கீடு மூன்றாம் வாரத்தில் முழுமையாகத் தொடர முடியாத நிலை ஒன்று உருவாகியுள்ளது. அரசகளஞ்சியங்களில் போதிய கையிருப்பு இன்மையே இதற்குக் காரணம் எனத்தெரியவருகின்றது. இவ்வாறானதொரு நிலை உருவாகுவதை தடுப்பதற்கு யாழ். செயலக அதிகாரிகளின் முன்கூட்டியே தீவிர நடவடிக்கை எடுக்காமையும், அவர்களின் கையிருப்பு, மக்களின் நுகர்வு தொடர்பான தப்புக் கணக்குமே காரணம் எனவும் தெரியவருகின்றது.

...சுதந்திரமாகத் திரும்ப விரும்புவதாகக் கூறும் உறுதிப் பத்திரங்களில் கையொப்பமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் விவகாரம் சம்பந்த...

**அடை மழை**

வாய்க்கால்களில் வெள்ளம் வழிந்தோடியது. குளம் குட்டைகள் நிரம்பிவழிகின்றன.

வீதியோரங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்து வீழ்ந்ததால் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டது. நீண்ட காலங்களாக நின்ற பெருமரங்கள் நகரின் சில இடங்களில் விழுந்து கிடந்தன. மக்கள் உடனுக்குடன் மரங்களை அகற்றிப் பாதையைப் போக்குவரத்துக்குச் சீராக்கினர்.

பாடசாலைகளில் பிள்ளைகளின் வரவும் மிகக்குறைவாகவே காணப்பட்டது. பள்ளிக்கூடங்களும் காலை பத்து மணியளவில் பள்ளிக்கூடங்களை மூடி மாணவர்களை வீட்டுக்கு அனுப்பினர்.

அரச திணைக்களங்களிலும் காரியாலயங்களிலும் ஊழியர் வரவு குறைந்து காணப்பட்டது. மழை இருட்டில் வேலை செய்ய முடியாமல் காரியாலய ஊழியர்கள் கஷ்டப்படுவதை அவதானிக்க முடிந்தது.

**போதிய**

யில் அகதி முகாம்களிலும் வீடுகளிலும் தஞ்சமடைந்திருக்கும் அகதி மக்கள் மத்தியில் போசாக்கின்மையும், சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது.

அடைமழையினால் ஏற்பட்டுள்ள குளிரினால் அவர்கள் பெரும் கஷ்டத்தை அனுபவிப்பதை அவதானிக்க முடிகிறது. நனைந்த உடையுடன் குளிரில் நடுங்கிய வண்ணமுள்ளனர்.

இந்த நிலையில் தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்த அகதி மக்களுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்குவது சம்பந்தமாக அரசாங்கம் உறுதியான அறிவிப்பு எதனையும் வெளியிடாதது இம் மக்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது. (தி)

...த மட்டிலும் அதிகாரிகள் மட்ட மாநாடு, வெளியுறவுச் செயலாளர்கள் மாநாடு, அமைச்சரவை மட்ட மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

**மாவீரர் நாள்**

களிடம் வீழ்ந்ததையும் ஞாபகப்படுத்தும் வகையில் மாவீரர் தின ஏற்பாடுகள் அங்கு பெரிய அளவில் இடம் பெறவுள்ளன. (58)

**கைதான**

யாணம் செய்த இவர்கள் ஆயுதங்கள், வெடிமருந்துகள் போன்றவற்றை இலங்கையின் வடபகுதியிலுள்ள தீவிரவாதிகளுக்கு விநியோகித்து வந்தமை தெரியவந்துள்ளது என்றும் இந்து தெரிவித்துள்ளது.

சர்வதேச கடல் எல்லையில் நிறுத்தப்பட்டிருக்கும் பெரிய கப்பலொன்றில் இருந்து இறக்கப்படும் ஆயுதங்கள், வெடிமருந்துகள், உபகரணங்கள் போன்றவற்றை அதிவேக விசைப்படகுகளில் எடுத்துச் சென்று புலிகளிடம் கையளிப்பதுதான் இவர்களின் பணி என்றும் இக்கப்பல் சிங்கப்பூரிலிருந்து புறப்படுகின்றது என்றும் இந்து தெரிவித்துள்ளது.

**மாவீரர்**

ளர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன் முதல் கட்டங்களாக இன்று மாலை ஏழு மணிக்கு வலிகாமம் பிரிவில் ஆரியகுளம் புங்கன்குளம் சனசமூக நிலையத்திற்கு அருகிலும், மானிப்பாய் மெமோறியல் கல்லூரி மண்டபத்திலும், வடமராட்சிப் பிரிவில் கரவெட்டி கரணவாய் மகாவித்தியாலய மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

**நேரகுசிகை**

ளுக்கான பரீட்சையும் நடைபெற்றது. நேர குசிகையில் திடீரெனச் செய்யப்பட்ட மாற்றம் சம்பந்தப்பட்ட கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்படாததால் இந்தத் தடுமாற்றம் என்று சொல்லப்படுகின்றது.

...உரையாற்றுகையில்

இது சரித்திரம் படைக்கும் மண் மாத்திரம் அல்ல. இது தியாகம் படைக்கின்ற நாடு மாத்திரமல்ல; தியாகச்சரித்திரத்துக்கே இலக்கணமாகி விட்ட மண். இந்த மண்ணில் பிறந்த கொடிகள் என்றாலும் சரி, துளிர்கள் என்றாலும் சரி உறுதியின் வித்துக்களாகத் தான் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

நமது தேசியக் கொடியான புலிக்கொடி, எமது தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் ஆலோசனைக்கு இணங்க வடிவமைக்கப்பட்டு 1977 ஆம் ஆண்டு மதுரை நடராசன் அவர்களால் வரையப்பட்டது. எமது தேசியக் கொடியின் நிறங்களாக மஞ்சள், சிவப்பு, கறுப்பு, என்பன எமது மக்களின் விடுதலைத் தாகங்களைத் தாங்கி நிற்கின்றன. எமது மக்களின் இரத்தத்தாலும், மாவீரர்களின் இரத்தத்தாலும், தோய்த்தெடுக்கப்பட்ட எமது தேசியக் கொடியான, புலிக் கொடியை, நாம் எமது உயிரிலும் மேலாக மதிக்க வேண்டும்; கௌரவிக்க வேண்டும்; போற்ற வேண்டும்.

எமது தேசியக்கொடி, சுதந்திரமாக நமது விடுதலை வானிலே, பறந்து ஒளி வீசுவதற்காக, தம்மையே அர்ப்பணித்த, மாவீரர்களை நினைவு கூர்ந்து, அவர்களின் தியாகத்தை உணர்ந்து, இம் மாவீரர் நாள்சிறப்பாக நடைபெற அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரளுவோமாக என்றார்.

**முகாமைத்துவ**

மேலும் அம்மகஜரில் 1987 ஆம் ஆண்டிலிருந்து வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்றும் பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பட்டம் பெற்ற பலர் வேலையின்றி உள்ளனர் என்றும், எம்மைப் போன்ற சில வருடக் கணக்கில் பயிலுனர்களாகவே உள்ளனர் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.